**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

அசல் வழக்கு எண். 13/2021

நாள் : 07.12.2022

பி.வா.சா.1 திருமதி. நபிசத்து தாஹிரா மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

எனது தகப்பனார் பெயர் ஜபருல்லா. தாயார் ரெஜினாபீவி. எங்கள் பெற்றோருக்கு நானும் வாதியும்தான் மக்கள் ஆவர். தாவா சொத்து எனது பெற்றோருக்கு பாத்தியப்பட்டது. பெற்றோர்கள் இருவரும் காலமாகிவிட்டார்கள். பெற்றோர்கள் இறந்தபின்னர் நானும், வாதியும் தாவா சொத்துக்களை பொருத்து முறைப்படி பாகம் செய்துகொள்ளவில்லை. பொதுவாக பெற்றோர்களின் சொத்துக்களில் மக்களுக்கு பாகம் உண்டு என்றால் சரிதான். எனது தாயாரிடமிருந்து தாவா 3ம் இலக்க சொத்தை பொருத்து எனது பெயருக்கு எப்போது தான செட்டில்மெண்ட் ஏற்பட்டது என்றால் சுமார் 5 வருடத்திற்கு முன்பு ஏற்பட்டது. எனது தாயார் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர் என்றால் சரிதான். இனாம் செட்டில்மெண்ட் ஏற்பட்ட காலத்திலும் எனது தாயார் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தார். நான் சிறுமியாக இருந்த காலத்திலிருந்து எனது தாயார் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தார். எனது தாயாரை இனாம் செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்த காலத்தில் மதுரையில் உள்ள ஒரு மருத்துவமனையில் வைத்து சிகிச்சை அளிக்கப்பட்டது. மருத்துவமனையின் பெயர் தெரியவில்லை.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்/ஜி. விஜயா,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்